# தூத்துக்குடி மாநகராட்சி

## 27.05.2026 ஆம் தேதி நடைபெற உள்ள மாமன்ற கூட்டப் பொருள் தொடர்ச்சி

**48)** தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 வெளியிடப்பட்ட அரசாணை எண்.45, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.12.04.2023 விதி எண்.169 (2) , (3) –.ல், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெற்று வரும் நிர்வாகம், திட்டப்பணிகள் முன்னேற்றம், நிதிநிலை, வருவாய், நகர திட்டமிடல், குடிநீர் விநியோகம், தெருவிளக்கு மற்றும் பொது மக்கள் அறியும் வண்ணம் வெளிப்படைத்தன்மையினை ஏற்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு நிதியாண்டிலும் முந்தைய நிதியாண்டு விவரங்களை நிர்வாக அறிக்கையாக தொகுத்து, மாமன்றத்திற்கு பொருள் வைத்து, நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தூத்துக்குடி மாநகராட்சியின் 2025–2026 ஆண்டு நிர்வாக அறிக்கையானது கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி மாநகராட்சி

### நிர்வாக அறிக்கை 2025–2026

1. **ஆட்சி எல்லை**

தூத்துக்குடி மாநகரம் மன்னார் வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ளது. தூத்துக்குடி, மீளவிட்டான், சங்கரப்பேரி வருவாய் கிராமங்கள்அடங்கிய பகுதியாகும். இந்நகர் வளர்ச்சியடைந்து படிப்படியாக உயர்ந்து 1984–85 ஆம் நிர்வாக ஆண்டில் அரசாணை எண்.590 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை நாள்.17/04/1984ன்படி சிறப்புநிலை நகராட்சியாக உயர்ந்து தற்போது அரசாணை எண்.137 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்) நாள்.29/07/2008ன்படி தூத்துக்குடி நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது.

**1 (அ) அமைப்பு**

தூத்துக்குடி மாநகராட்சியின் பரப்பளவு 90.66 சதுர கிலோமீட்டர் ஆகும்.

**1 (ஆ) மக்கள்தொகை**

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி இம்மாநகரத்தின் மக்கள் தொகை 3,72,408 ஆகும்.

2. **வார்டு பிரிவில் செயல்முறை**

இம்மாநகராட்சியில் புதியமேயர் மற்றும் 60 வார்டு மாமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 19–02–2022ல் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்று 02–03–2022ல் 60 மாமன்ற உறுப்பினர்கள் பதவிபிரமானம் எடுத்துக்கொள்வதற்கான முதல் கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 04–03–2022ல் மறைமுகதேர்தல் நடைபெற்று மாமன்ற உறுப்பினர்கள் மூலம் மேயர் மற்றும் துணைமேயர் தேர்ந்தெடுத்தனர். மாநகராட்சி 60 வார்டுகளில் பின்வருமாறு இடஒதுக்கீடு முறை தூத்துக்குடி

மாவட்டஅரசிதழ் அறிவிக்கை எண். 4, நாள். 08–09–2019 ன்படி பிரசுரம் செய்யப்பட்டு இடஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

| வார்டு இட ஒதுக்கீடு விபரம் | வார்டு விபரம் |
|---|---|
| பட்டியலினத்தவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவார்டுகள் (3 வார்டுகள்) | 48, 53, 58 |
| பட்டியலினபெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (4 வார்டுகள்) | 1, 4, 36, 49 |
| பெண்களுக்காக பொதுஒதுக்கீடு வார்டுகள் (26 வார்டுகள்) | 2, 8, 9, 10, 11, 13, 19, 21, 22, 23, 24, 25, 26, 27,28,29, 30, 37, 38, 40, 41, 42, 43, 44, 46, 57 |
| பொதுவார்டுகள் (27 வார்டுகள்) | 3, 5 ,6, 7, 12, 14, 15, 16, 17, 18, 20, 31, 32, 33, 34, 35, 39, 45,47, 50, 51, 52, 54, 55, 56, 59, 60 |

தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர், துணைமேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் விபரம் வருமாறு.

பதவிக்காலம் 02/03/2022 முதல் 01/03/2027

| | | |
|---|---|---|
| 1 | திரு. பெ.ஜெகன் | மேயர் |
| 2 | திருமதி. செ.ஜெனிட்டா | துணைமேயர் |
| 3. | திருமதி.பா.காந்திமணி | 1வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 4. | திருமதி.பொ.சுப்புலெட்சுமி | 2வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 5. | திரு.ரா.ரெங்கசாமி | 3 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 6. | திருமதி.பா.நாகேஸ்வரி | 4 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 7. | திரு.அ.அந்தோணிபிரகாஷ்மார்சிலின் | 5 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 8. | திருமதி.க.ஜெயசீலி | 6 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 9. | திரு.தொ.நிர்மல்ராஜ் | 7 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 10. | திருமதி.மா.பவானி | 8 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 11. | திருமதி.ம.செபஸ்டின் சுதா | 9 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 12 | திருமதி.செ.பத்மாவதி | 10 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 13. | திருமதி.சே.கற்பகக்கனி | 11 வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 14. | திரு.சா.தெய்வேந்திரன் | 12வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 15. | திருமதி.செ.ஜாக்குலின் ஜெயா | 13வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 16. | திரு.ம.முருகேசன் | 14வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 17. | திரு.வெ.இசக்கிராஜா | 15வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 18. | திரு.பா.கண்ணன் | 16வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 19. | திரு.த.இராமர் | 17வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 20. | திரு.த.ஸ்ரீனிவாசன் | 18வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 21. | திருமதி.சி.சோமசுந்தரி | 19வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 22 | திருமதி.மூ.ஜான்ஸிராணி | 21வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 23. | திருமதி.தி.மகேஸ்வரி | 22வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 24. | திருமதி.ஞா.தனலெட்சுமி | 23வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 25. | திருமதி.டே.மெட்டில்டா | 24வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 26. | திருமதி.பி.எடிண்டா | 25வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 27. | திருமதி.இ.மரியகீதா | 26வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 28. | திருமதி.எஸ்.சரண்யா | 27வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 29. | திருமதி.ஆ.ராமுஅம்மாள் | 28வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 30. | திருமதி.தி.கலைச்செல்வி | 29வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 31. | திருமதி.ர.அதிஷ்டமணி | 30வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 32 | திரு.எஸ்.பி.கனகராஜ் | 31வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 33. | திரு.அ.கந்தசாமி | 32வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 34. | திரு.மு.பொன்னப்பன் | 33வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 35. | திரு.சு.சந்திரபோஸ் | 34வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 36. | திரு.ரா.வீரபாகு | 35வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 37. | திருமதி.ர.விஜயலெட்சுமி | 36வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 38. | திருமதி.ஆ.பாப்பாத்தி | 37வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 39. | திருமதி.மும்தாஜ் | 38வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 40. | திரு.ச.சுரேஷ்குமார் | 39வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 41. | திருமதி.ஜெ.ரிக்டா | 40வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 42 | திருமதி.பொ.பேபிஏஞ்சலின் | 41வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 43. | திருமதி.கோ.அன்னலெட்சுமி | 42வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 44. | திருமதி.ர.முத்துமாரி | 43வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 45. | திருமதி.ஜெ.ஜெயராணி | 44வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 46. | திரு.ப.ப.ராமகிருஷ்ணன் | 45வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 47. | திருமதி.சூ.ரெக்ஸ்லின் | 47வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 48. | திரு.சு.ராஜேந்திரன் | 48வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 49. | திருமதி.ப.வைதேகி | 49வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 50. | திரு.செ.சரவணகுமார் | 50வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 51. | திரு.சி.மந்திரமூர்த்தி | 51வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 52 | திரு.க.வெற்றிசெல்வன் | 52வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 53. | திரு.ச.முத்துவேல் | 53வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 54. | திரு.ச.விஜயகுமார் | 54வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 55. | திரு.மு.ராஜதுரை | 55வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 56. | திரு.சி.சுயம்பு | 56வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 57. | திருமதி.சு.ஜெயலெட்சுமி | 57வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |
| 58. | திரு.தே.பச்சிராஜ் | 58வதுவார்டுமாமன்றஉறுப்பினர் |

59. திரு.எஸ்.பி.எஸ்.ராஜா 59வதுவார்டுமாமன்றஉறுப்பினர்

60. திரு.ஆ.பாலகுருசுவாமி 60வதுவார்டுமாமன்றஉறுப்பினர்

3. <u>மாமன்றகூட்டங்கள் 2025– 26</u>

அறிக்கையாண்டில் மாண்புமிகு மேயர் அவர்களால் கீழ்க்கண்டவாறு மான்றக்கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

1. சாதாரணக் கூட்டங்கள் 12

மேற்குறிப்பிட்ட மன்றக்கூட்டங்களில் மொத்தம் 187 பொருட்கள் மீதான தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு பரிசீலித்து முடிவு செய்யப்பட்டது.

4. <u>குழுக்கள்</u>

தேர்ந்தெடுக்கப்பட்ட மாமன்றத்தில் கீழ்க்குறிப்பிட்ட குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

| வ.எண் | குழுக்கள்விபரம் |
|---|---|
| 1 | வார்டு குழு தலைவர் |
| 2 | கணக்கு குழு |
| 3 | பொதுசுகாதார குழு |
| 4 | கல்விகுழு |
| 5 | நகரமைப்பு குழு |
| 6 | வரிவிதிப்புமற்றும் நிதிக் குழு |
| 7 | பணிகள் குழு |
| 8 | நியமனக்குழு |

| வ.எண் | குழுக்கள்விபரம் | குழு தலைவர் | வார்டுமண்டலம் |
|---|---|---|---|
| 1 | வார்டு குழு தலைவர் | திரு.தொ.நிர்மல்ராஜ் | வடக்குமண்டலம் |
| 2 | | திரு. ஆ.பாலகுருசுவாமி | தெற்குமண்டலம் |
| 3 | | திரு. தி.கலைச்செல்வி | கிழக்கு மண்டலம் |
| 4 | | திரு. கே.அன்னலெட்சுமி | மேற்குமண்டலம் |

| கணக்குகுழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திரு.ரா.ரெங்கசாமி |
| உறுப்பினர் | திருமதி.பி.எடிண்டா |
| உறுப்பினர் | திருமதி.பொ.பேபிரஞ்சலின் |
| உறுப்பினர் | திருமதி.பா.காந்திமணி |
| உறுப்பினர் | திரு.ச.முத்துவேல் |
| உறுப்பினர் | திரு.மு.பொன்னப்பன் |

| பொதுசுகாதாரகுழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திரு.ச.சுரேஷ்குமார் |
| உறுப்பினர் | திருமதி.கு.ஜெயசீலி |
| உறுப்பினர் | திருமதி.மூ.ஜான்ஸிராணி |
| உறுப்பினர் | திருமதி.மும்தாஜ் |
| உறுப்பினர் | திரு.அ.கந்தசாமி |
| உறுப்பினர் | திரு.தே.பச்சிராஜ் |

| கல்விகுழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திருமதி.ர.அதிஷ்டமணி |
| உறுப்பினர் | திருமதி.எஸ்.சரண்யா |
| உறுப்பினர் | திருமதி.பொ.சுப்புலெட்சுமி |
| உறுப்பினர் | திருமதி.ர.முத்துமாரி |
| உறுப்பினர் | திரு.ச.விஜயகுமார் |
| உறுப்பினர் | திருமதி.ஆ.பாப்பாத்தி |

| நகரமைப்பு குழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திரு.ப.ப.ராமகிருஷ்ணன் |
| உறுப்பினர் | திருமதி.இ.மரியகீதா |
| உறுப்பினர் | திருமதி.மா.பவானி |
| உறுப்பினர் | திருமதி.ர.விஜயலெட்சுமி |
| உறுப்பினர் | திரு.த.இராமர் |
| உறுப்பினர் | திரு.மு.ராஜதுரை |

| வரிவிதிப்புமற்றும் நிதிக் குழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திரு.எஸ்.பி.கனகராஜ் |
| உறுப்பினர் | திருமதி.ஞா.தனலெட்சுமி |
| உறுப்பினர் | திருமதி.ஜெ.ரிக்டா |
| உறுப்பினர் | திருமதி.ப.வைதேகி |
| உறுப்பினர் | திருமதி.சே.கற்பகக்கனி |
| உறுப்பினர் | திரு.சு.ராஜேந்திரன் |

| பணிகள் குழு | குழு கூட்டதலைவர்/ உறுப்பினர் விபரம் |
|---|---|
| தலைவர் | திரு.ம.முருகேசன் |
| உறுப்பினர் | திருமதி.ம.செபஸ்டின் சுதா |
| உறுப்பினர் | திருமதி.சி.சோமசுந்தரி |
| உறுப்பினர் | திருமதி.ஆ.ராமுஅம்மாள் |
| உறுப்பினர் | திரு.செ.சரவணகுமார் |

| உறுப்பினர் | திரு.பா.கண்ணன் |
|---|---|

தேர்வுசெய்யப்பட்ட மாமன்றஉறுப்பினர்களில் மேற்காணும் பட்டியலில்கண்டுள்ள விபரப்படி நிலைக்குழுதலைவர் மற்றும் உறுப்பினர்களாக 31.03.2022 முதல் பதவி வகித்து வருகின்றனர்.மேலும் நியமனக்குழு உறுப்பினராக திரு.ச.சந்திரபோஸ் தேர்ந்தெடுக்கப்பட்டு 31.03.2022 முதல் பதவி வகித்து வருகின்றனர்.

5. <u>பகுதி சபா</u>

நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு துறை அரசாணை எண். 92 மற்றும் 93, நாள். 24.06.2022 மற்றும் தமிழ்நாடு அரசு அறிவிக்கை எண். 358, நாள். 24.06.2022 ஆகியவற்றில் மாநகராட்சிகள் சட்டம் பிரிவுகளின்படி உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தவும், நகர்ப்புற உள்ளாட்சி செயல்பாடுகளில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் திட்டம், வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தவும் வார்டு குழு மற்றும் பகுதிசபா உருவாக்குவதற்கும், அதன் செயல்பாடுகளுக்கும் விதிகள் வெளியிட்டும், மேற்படி குழுவிற்கு குழுசெயலர் நியமிப்பதற்கும் உரிய அரசாணைகள் வெளியிட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு வார்டு குழு அமைத்து அந்தந்த வார்டு மாமன்ற உறுப்பினர் அந்த வார்டு குழு தலைவராக செயல்படுவதற்கும், அந்த வார்டில் வாக்குரிமை பெற்ற ஒவ்வொரு வார்டு பகுதியில் ஒரு நபரை வார்டுகுழு உறுப்பினர்களாக செயல்பட மாமன்றம் மூலம் பரிந்துரை செய்து ஒவ்வொரு வார்டு பகுதியில் பகுதி சபா பகுதிகளின் எண்ணிக்கை 5 என்ற எண்ணிக்கை அளவில் அமைப்பதற்கு ஏதுவாக வார்டு எல்லை பகுதி பிரிக்கப்பட்டு 60 வார்டு பகுதிகளில் வார்டு ஒன்றுக்கு 5 என்ற அளவில் சுமார் 300 எண்ணிக்கையிலான வார்டு குழு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

வார்டு கமிட்டி கூட்டம் நடத்திட அலுவலர்கள்/ பணியாளர்களை ஒவ்வொரு வார்டு கமிட்டிக்கும் கூட்டச் செயலாளர்களாக நியமனம் செய்து ஆணையர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண். 64, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள். 22.05.2023-ன் படி பகுதி சபா கூட்டத்தினை ஒவ்வொரு ஆண்டும் நான்கு கூட்டங்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்வரும் பட்டியலில் கண்டுள்ள தேதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 1998 பிரிவு எண் 49 எப், 49எச் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 விதி எண் 180ன் படி கூட்டுவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

| பகுதி சபா கூட்டம் நடத்துவதற்கான தேதிகள் விபரம் | | | |
|---|---|---|---|
| வ.எண் | கூட்டம் மாதம் | தேதி | கூட்டம் கூட்டுவதற்கான முக்கிய தினங்கள் |
| 1 | ஜனவரி | 25ஆம் தேதி | தேசிய வாக்காளர் தினம் |
| 2 | ஏப்ரல் | 14ஆம் தேதி | டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினம் |
| 3 | செப்டம்பர் | 15ஆம் தேதி | பேரறிஞர் அண்ணா பிறந்த தினம் |
| 4 | டிசம்பர் | 10ஆம் தேதி | மனித உரிமைகள் தினம் |

மேற்கண்ட அரசாணையில் உத்திரவிடப்பட்டுள்ளபடி, அறிக்கையாண்டில் 15.09.2025, 10.12.2025 மற்றும் 25.01.2026, ஆகிய தேதிகளில் தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டு பகுதிகளில் பகுதி சபா கூட்டம் நடத்தப்பட்டு, மாநகராட்சி பணிகளில் பொது மக்களின் பங்களிப்பினை ஊக்குவித்து, அவர்களுடைய அடிப்படை தேவைகளை நிறைவு செய்திடும் வகையில் திட்டம் மற்றும் வளர்ச்சிப்பணிகள் செயல்படுத்தவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6. நிர்வாகம்

தமிழ்நாட்டில் உள்ள 20 மாநகராட்சிகளை, மக்கள்தொகைக்கேற்ப அளவுகோல் நிர்ணயம் செய்து, ஒரே சீரான புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல், ஏற்கனவே உள்ள பணியிடங்களை மறுசீரமைத்தல் மற்றும் முறைப்படுத்துதல் தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை எண். 152, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குல்துறை (மா.ந.7) நாள். 20.10.2022–ன் படி, தூத்துக்குடி மாநகராட்சிக்கு கீழ்க்கண்ட பணியிடங்கள்அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதில் தற்போது பணிபுரிந்து வரும் அலுவலர் /பணியாளர்களின் எண்ணிக்கை பட்டியலிடப்பட்டுள்ளது.

**பொது நிர்வாகப்பிரிவு பணியமைப்பு**

அரசாணை எண் 152 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்20.10.2022 ன்படி அனுமதிக்கப்பட்ட பொது நிர்வாகப் பிரிவு அலுவலர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை | காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஆணையர் | 1 | 1 | 0 |
| 2 | துணை ஆணையாளர் | 2 | 1 | 1 |
| 3 | உதவிஆணையர்(பணியாளர்/ வருவாய்) | 1 | 0 | 1 |
| 4 | உதவிஆணையர்( கணக்கு) | 1 | 1 | 0 |
| 5 | உதவிஆணையர்( மண்டலம் ) | 4 | 1 | 3 |
| 6 | கணக்குஅலுவலர் | 1 | 0 | 1 |
| 7 | நிர்வாகஅலுவலர் | 4 | 2 | 2 |
| 8 | கண்காணிப்பாளர் | 10 | 8 | 2 |
| 9 | உதவி வருவாய் அலுவலர் | 4 | 1 | 3 |
| 10 | உதவியாளர் | 17 | 10 | 7 |
| 11 | நேர்முக எழுத்தர் | 3 | 0 | 3 |
| 12 | இளநிலைஉதவியாளர் | 20 | 13 | 7 |

| பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணியிடங்கள் அரசாணை எண்.152 , நாள் 20.10.2022 க்கு முன் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் ஆகும். கீழ்கண்ட பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் ஓய்வுபெறும் காலம் வரை மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கிடவும், ஓய்விற்குப்பிறகு இப்பணியிடங்களை வெளிமுகமை மூலம் நிரப்பிட அரசாணை எண்.152இல் ஆணையிட்டுள்ளது. | | |
|---|---|---|
| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை |
| 1 | வரிவசூலிப்பவர் | 4 |
| 2 | புள்ளிவிபரகுறியீட்டாளர் | 1 |
| 3 | உதவிகணினிதிட்டஅமைப்பாளர் | 0 |
| 4 | அலுவலகஉதவியாளர் | 14 |
| 5 | இரவுகாவலர் | 1 |

**பொறியியல் பிரிவு பணியமைப்பு**

அரசாணை எண் 152 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 20.10.2022ன்படி அனுமதிக்கப்பட்ட பொறியியற் பிரிவு அலுவலர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை | காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மாநகர பொறியாளர் | 1 | 1 | 0 |
| 2 | துணை மாநகர பொறியாளர் (செயற்பொறியாளர் நிலை) | 3 | 0 | 3 |
| 3 | உதவி செயற்பொறியாளர் | 5 | 2 | 3 |
| 4 | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் | 16 | 12 | 4 |
| 5 | வரைவாளர் | 3 | 1 | 2 |
| 6 | தொழில்நுட்ப உதவியாளர் | 32 | 22 | 10 |
| 7 | ஓட்டுநர் | 2 | 13 | 11 மிகுதி |
| 8 | நகரதிட்டமிடுநர் | 1 | 1 | 0 |
| 9 | உதவி நகர திட்டமிடுநர் | 2 | 1 | 1 |
| 10 | நகரமைப்பு ஆயவர் | 12 | 6 | 6 |

பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணியிடங்கள் அரசாணை எண் 152, நாள் 20.10.2022க்கு முன் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் ஆகும். கீழ்க்கண்ட பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் ஓய்வுபெறும்

காலம் வரை மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கிடவும், ஓய்விற்குப்பிற்கு இப்பணியிடங்களை வெளிமுகமை மூலம் நிரப்பிட அரசாணை எண் 152ல் ஆணையிட்டுள்ளது.

<u>மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை</u>

தூத்துக்குடி மாநகராட்சியில் அரசின் பல்வேறு திட்டங்களின் வாயிலாக மாநகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் சாலைகள், மழைநீர் வடிகால் வசதிகள், குடிநீர் வசதிகள் மற்றும் மாநகரின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் மேற்படி திட்டங்களின் பணிமுன்னேற்றம் தொடர்பான அறிக்கைகள் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

❖ <u>நமக்கு நாமேதிட்டம் 2025–26</u>

நமக்கு நாமே திட்டம் 2025–26–ன் கீழ், தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட எட்டையாபுரம் சாலை பகுதியில், சங்கரப்பேரி முதல் பெரிய பள்ளம் ஓடை வரை மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான ஜின் பாக்டரி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி ரூ.24.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது.

முத்துநகர் மற்றும் ரோச் பூங்கா பகுதியில் திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கும் பணிகள் ரூ.40.00 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளது.

முத்து நகர் கடற்கரை பூங்கா பகுதியில் குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்கள், திறந்த வெளி உடற்பயிற்சி கூடம் மற்றும் நீச்சல் குளம் அமைக்கும் பணிகள் ரூ.401.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட தேவகி நகர் மற்றும் சின்னமணி நகர் பூங்கா பராமரிப்பு பணிகள் ரூ.14.00 செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட சிவன் கோவில் தெப்பக்குளத்தினை ரூ.75.00 இலட்சம் செலவில் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ <u>சுற்றுச்சூழல் மேம்பாட்டு நிதி 2022–23</u>

சுற்றுச்சூழல் மேம்பாட்டு திட்டம் 2022–23 நிதியின் கீழ் ரூ.1110.00 இலட்சம் மதிப்பீட்டில் நீர்நிலைகள் புனரமைக்கும் பணி, ஆரோக்கிய நடைபாதை அமைக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 50 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதி 2025–26</u>

சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியின் கீழ் ரூ.11.46 கோடி மதிப்பீட்டில், துறைமுக கடற்கரை பகுதியினை மேம்படுத்தும் பணிகள், மேலூர் மாநகராட்சி பள்ளியில் முதல்தளம் கட்டும் பணி, இந்து அரிசன தொடக்கப்பள்ளியில் கூடுதல்

வகுப்பறை, கழிவறை கட்டிடம் அமைக்கும் பணிகள், காமராஜ் நகர் பகுதியில் அமைந்துள்ள காவலர் குடியிருப்பில் உடற்பயிற்சி கூடம் மற்றும் குடிநீர் குழாய் இணைப்பு அமைக்கும் பணிகள் மற்றும் பிறவி செவிதிறன் குறைபாடு கண்டறியும் ஆய்வுக்கூடம் அமைக்கும் பணிகளானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **15வது மத்திய குழு நிதி (Tied)**

15வது மத்திய குழு நிதி 2023–2024 மற்றும் 2025–26 நிதியின் கீழ் ரூ.515.00 இலட்சம் மதிப்பீட்டில் வல்லநாடு தலைமை நீரேற்று நிலைய பகுதியில் பிரதான குடிநீர் குழாய் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 15வது மத்திய குழு நிதி 2023–2024 நிதயின் கீழ் ரூ.64.60 இலட்சம் மதிப்பீட்டில் டேங்கர் லாரி கொள்முதல் செய்திடும் பணி, ரூ.99.00 இலட்சம் மதிப்பீட்டில் தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் கி/மே தார்ச்சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 15வது மத்திய குழு நிதி 2022–2023, 2023–24, 2025–26 நிதியின் கீழ், ரூ.369.90 இலட்சம் மதிப்பீட்டில் தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் தார்ச்சாலை அமைக்கும் பணி, ஜேசிபி மற்றும் ஜெட்ராட் வாகனம் கொள்முதல் செய்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் 15வது மத்திய குழு நிதி 2025–2026 நிதியின் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 7 சிப்பங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு, 5 சிப்ப பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **15வது மத்திய குழு நிதி (UnTied)**

15வது மத்திய குழு நிதி 2025–26 (ருசேூநைன ) நிதியின் கீழ் ரூ.372.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மற்றும் லூர்த்தம்மாள்புரம் திருவள்ளுவபுரம் முதல் திரேஸ்புரம் கடற்கரை பகுதி வரை ரூ.202.50 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP)**

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2025–2026ன் (தொகுப்பு ஐ முதல் ஐஐஐ வரை) கீழ் ரூ.3418.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 85 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சாலைகள் மேம்பாட்டுத்திட்டம் 2025–2026ன் கீழ் ரூ.3079.60 இலட்சம் மதிப்பீட்டில் 47.59 கி.மீ நீளத்திற்கு தார் சாலைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 43.84 கி.மீ நீளத்திற்கு சாலை பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ **மாநில நிதிக்குழு 2025–26 (SFC URDF 25–26)**

மாநில நிதிக்குழு 2025–2026ன் கீழ் ரூ.1574.00 இலட்சம் மதிப்பீட்டில் 22.49 கி.மீ நீளத்திற்கு சாலைகள் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 95 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **சாலை மேம்பாட்டிற்கான சிறப்பு நிதி 2025–26 (Special Fund 2025–26)**

சிறப்பு சாலைகள் நிதியின் கீழ் ரூ.1470.00 இலட்சம் மதிப்பீட்டில் 22.49 கி.மீ நீளத்திற்கு 253 சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **நூலக வரி நிதி**

தூத்துக்குடி மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட தனசேகரன் நகர் பகுதியில் ரூ.9.85 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கூடிய மாவட்ட மையம் நூலகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **மாநில பேரிடர் மேலாண்மை தடுப்பு நிதி 2025–26**

மாநில பேரிடர் மேலாண்மை தடுப்பு நிதி 2025–26–ன் கீழ் ரூ.53.70 கோடி மதிப்பீட்டில் பக்கிள் கால்வாய் அகலப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **கால்நடை பராமரிப்பு துறைத்திட்டம் 2025–26**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தருவைக்குளம் உரக்கிடங்கு வளாகத்தில் கைவிடப்பட்ட, நோயுற்ற, பலவீனமான மற்றும் வயது முதிர்ந்த விலங்களுக்கான விலங்குகள் தங்குமிடம் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–26**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–26 நிதியின் கீழ் ரூ.3.69 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள், பயணியர் நிழற்குடை, மழைநீர் வடிகால் பணிகள், பொது விநியோக கடை, சிறுபாலம் மற்று குடிநீர் குழாய் பதிக்கும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2025–26**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2025–26–ன் கீழ் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது விநியோகக்கடை, பயணியர் நிழற்குடை மற்றும் பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தும் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **24ஓ7 குடிநீர் வழங்கல் திட்டம்**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.1606.00 கோடி மதிப்பீட்டில் 24X7 குடிநீர் வழங்கல் திட்டப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 49 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **பாதாள சாக்கடை திட்டப்பணி**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட வார்டு பகுதிகளில் ரூ.15329.00 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 92 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ **தூய்மை பாரத இயக்கம் (2.0) 2025–26**

தூய்மை பாரத திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமுதாய கழிப்பிடங்கள், பொது கழிப்பிடங்கள், சிறுநீர் கழிப்பிடங்கள் மற்றும் கழிவறை மறுசீரமைப்பு பணிகளை ரூ.1.61 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 95 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதி 2024–25</u>

இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை மானிய நிதி 2024–25–ன் கீழ் ரூ.558.00 இலட்சம் மதிப்பீட்டில் பக்கிள் கால்வாயில் ஆர்சிசி லைனிங் மற்றும் கல்பதிப்பு வேலையினை மேற்கொள்ள 04.07.2025 ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியில் தற்போது 70 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>மூலதன மான்யம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி</u>

மூலதன மான்யம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நிதி 2025–2026ன் கீழ், தெற்கு மண்டலத்திற்குட்பட்ட அய்யன் கோவில் தெரு பகுதியில் ABC மையம், அம்பேத்கார் நகர் பகுதியில் தினசரி சந்தை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை ரூ.652.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, 70 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>15வது மத்திய நிதிக்குழு சுகாதார நிதி</u>

15வது மத்திய நிதிக்குழு சுகாதார நிதியின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சிக்குட்ட குரூஸ்புரம், மாப்பிள்ளையூரணி மற்றும் முள்ளக்காடு பகுதிகளில் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் அமைக்கும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 75 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>பள்ளி உள்கட்டமைப்பு மான்யம் நிதி 2025–26</u>

பள்ளி உள்கட்டமைப்பு மான்யம் நிதி 2025–26 நிதியின் கீழ், தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட தங்கம்மாளபுரம் மாநகராட்சி பள்ளியில் புதிதாக 4 வகுப்பறைகள் கட்டும் பணி ரூ.76.30 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு, 65 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>மூலதன மான்யம் நிதி 2025–26</u>

மூலதனமான்ய நிதி 2025–26–ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பாளை ரோடு பகுதியில் எல்பிஜி எரிவாயு தகன மேடை அமைக்கும் பணியினை ரூ.163.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நிர்வாகஅனுமதி வழங்கப்பட்டு 90 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

❖ <u>குடிநீர் விநியோகப்பணி:</u>

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் மற்றும் கலியாவூர் நீரேற்று நிலையம் மூலம் தாமிரபரணி தண்ணீர் எடுத்து

சுத்திகரிக்கப்பட்டு மாநகர மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகை ரூ.563672 என்ற அடிப்படையில் நாளொன்றுக்கு 76.10 எம்.எல்.டி தண்ணீர் எடுக்கப்பட்டு மாநகர பகுதிகளில் உள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 49 வார்டுகளுக்கு தினசரி குடிநீர் விநியோகமும், 11 வார்டுகளுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகமும் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் 94568 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

❖ <u>தெருவிளக்கு பராமரிப்பு பணி:</u>

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட 60 வார்டுகளில் மொத்தம் 18226 டியூப் தெருவிளக்குகள் உள்ளன. 15[th]CFC திட்டத்தின் கீழ் மேலும் 2887 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் தெருவிளக்குகள் தொடர்பான புகார்கள் அனைத்தும் பொதுமக்கள் நலன் கருதி 48 மணிநேரத்திற்குள் சரிசெய்து கொடுக்கப்படுகிறது.

❖ <u>பொது நிதி</u>

தூத்துக்குடி மாநகராட்சியில் பொது நிதி 2025–2026ன் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார் சாலைகள், பேவர் பிளாக் சாலைகள், மாநகராட்சி கட்டிடங்கள் பராமரிப்பு, பூங்கா பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, மற்றும் இதர உள்கட்டமைப்பு பணிகள் மொத்தம் 133 பணிகள் ரூ.14.35 கோடி மதிப்பீட்டில் எடுக்கப்பட்டுள்ளது. அதில் 58 பணிகள் முடிக்கப்பட்டுள்ள 75 பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ <u>குடிநீர் மற்றும் வடிகால் நிதி பணி</u>

குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025–2026 யின் கீழ் விநியோக குடிநீர் குழாயில் ஏற்பட்டுளள கசிவு, உடைப்பி சரிசெய்தல், புதிதாக குழாய்கள் பதித்தல் மற்றும் வால்வு தொட்டி அறை கட்டுமானம் அமைத்திடும் பணிகள் என மொத்தம் 82 பணிகள் ரூ.3.88 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டது. அதில் 52 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது 30 பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ <u>கல்வி நிதி</u>

தூத்துக்குடி மாநகராட்சிக்கான 20 பள்ளிகளில் தொடக்கப்பள்ளி –8, நடுநிலைப்பள்ளி–11 மற்றும் மேல்நிலைப்பள்ளி –1 அடங்கும். இவற்றிக்கான அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணி வகைகளுக்காக 2025–2026 ம் ஆண்டு கல்வி நிதியின் கீழ் மாணவர்களின் நலன் கருதி புதிய வகுப்பறைகள், முதல்வர் படைப்பகம், பள்ளி கட்டிடம் மற்றும் கழிப்பறைகள் பராமரிப்பு என மொத்தம் 7 பணிகள் ரூ.3.91 கோடி மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 5 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, 2 பணிகள் நடைபெற்று வருகிறது.

❖ <u>தேசிய தூய்மை காற்றுத் திட்டம்:</u>

2025–2026ம் ஆண்டு தேசிய தூய்மை காற்று திட்டத்தின் கீழ் ரூ.7.94 கோடி மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலைகள் மற்றும் பூங்கா அமைத்தல் போன்ற பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## கணக்குப் பிரிவு

7. தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் – செலவின விபரங்கள்

1) வருவாய் நிதி

2025–26 ஆம் ஆண்டில் சொத்துவரி , இதர வரி மற்றும் வரியில்லா இனங்கள் மூலமாக ரூ. 4529.50 இலட்சம் , முத்திரை கட்டணம் மற்றும் கேளிக்கை வரியாக ரூ. 575.00 இலட்சம் , அரசு மானியம் மற்றும் மாநில பகிர்மான நிதியாக ரூ.6860.00 இலட்சம், 15 வது நிதி குழு மானியமாக ரூ.1500.00 இலட்சம் மற்றும் ஏனைய வருமானங்கள் மூலம் ரூ.3661.59 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.17126.09 இலட்சம் வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED )

இதில் நடப்பு ஆண்டிற்காக 2025– 2026 சம்பளம் ,ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியர்கள் தொடர்பான செலவினங்களுக்கு ரூ. 7817.00 இலட்சம் , நிர்வாக செலவினங்களுக்கு ரூ.729.50 இலட்சம், சாலை, கட்டிடங்கள் மற்றும் இதர பராமரிப்பு , இயக்க செலவினங்களுக்காக ரூ 6804.00 இலட்சம் , நிதி மற்றும் மற்றும் திட்டமிட்ட செலவினங்களுக்காக ரூ.181.00 இலட்சம், பொது நிதி பங்களிப்புக்காக ரூ.1300.00 இலட்சம் என ஆக மொத்தம் ரூ.16831.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது . இதில் ரூ.294.59 இலட்சம் உபரியாக வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED )

2) குடிநீர் மற்றும் வடிகால் நிதி

நடப்பு ஆண்டில் (2025–2026) குடிநீர் வரியாக ரூ.2130.50 இலட்சமும் பயன்பாட்டு கட்டணமாக ரூ. 4202.38 இலட்சமும் இதர வருமானமாகவும் ரூ. 200.00 இலட்சம் என ஆக மொத்த ரூ. 6532.88 இலட்சம் வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED)

இதில் சம்பளம் மற்றும் ஓய்வூதியர் செலவினங்களுக்கு ரூ. 695.35 இலட்சம் குடிநீர் பணி இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவினத்திற்காக ரூ. 1910.00 இலட்சமும், நிர்வாக மற்றும் இதர செலவினங்களுக்காக (பொதுநிதி பங்களிப்பு) ரூ.2094.30 இலட்சமும், நிதி செலவினங்களுக்காக ரூ.1600.00 இலட்சமும் என ஆக மொத்தம் ரூ. 6299.65 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது . இதில் ரூ.233.23 இலட்சம் உபரியாக வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED)

3) ஆரம்ப கல்வி நிதி

நடப்பு ஆண்டில் (2025–2026) கல்வி வரியாக ரூ. 783.47 இலட்சமும் மற்றும் இதர வருமானமாக ரூ. 27.00 இலட்சம் என ஆக மொத்தம் ரூ. 810.47 இலட்சம் வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED)

இதில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்கு ரூ.147.00இலட்சமும், நிர்வாக மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.446.00 இலட்சம் என ஆக மொத்தம் ரூ. 593.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது . இதில் ரூ.217.47 இலட்சம் உபரியாக வருமானம் வரப்பெற்றுள்ளது . (UN AUDITED)

## தூத்துக்குடி மாநகராட்சி வைப்புத்தொகை விபரம் 2025–2026

**1).முன் வைப்புத்தொகை (ம) கூடுதல் வைப்புத்தொகை:**

தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் (ம) மூலதன நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை (ம) கூடுதல் வைப்புத்தொகை கணக்கில் ரூ.**29,96,28,798/–**
இருப்பு உள்ளது.

குடிநீர் வடிகால் நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை (ம) கூடுதல் வைப்புத்தொகை கணக்கில் ரூ.**6,46,12,955/–**இருப்பு உள்ளது.

கல்வி நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை (ம) கூடுதல் வைப்புத்தொகை கணக்கில் ரூ.**24,03,106/–**இருப்பு உள்ளது.

**2).ஒப்பந்ததாரர்களின் காப்பு வைப்புத்தொகை:**

தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் (ம) மூலதன நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட காப்பு_வைப்புத்தொகை கணக்கில் ரூ.**1,47,751/–** இருப்பு உள்ளது.

குடிநீர் வடிகால் நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட காப்பு வைப்புத்தொகை கணக்கில் ரூ.**8,91,205/–**இருப்பு உள்ளது.

கல்வி நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட காப்பு வைப்புத்தொகை கணக்கில் ரூ.**39,828/–**இருப்பு உள்ளது.

**3).ஒப்பந்ததாரர்களின் பணிகளில் பிடித்தம் செய்த 5ரூ வைப்புத்தொகை:**

தூத்துக்குடி மாநகராட்சி வருவாய் (ம) மூலதன நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்கள் பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை கணக்கில் ரூ.**60,22,14,266/–**இருப்பு உள்ளது.

குடிநீர் வடிகால் நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்கள் பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை கணக்கில் ரூ.**1,95,19,260/–**இருப்பு உள்ளது.

கல்வி நிதி கணக்கில் ஒப்பந்ததாரர்கள் பணிகளில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை கணக்கில் ரூ.**10,48,070/–**இருப்பு உள்ளது.

**4).குத்தகைதாரர்கள் வைப்புத்தொகை:**

தூத்துக்குடி மாநகராட்சி குத்தகைதாரர்களால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகை கணக்கில் ரூ.**6,89,71,730/–**இருப்பு உள்ளது.

**4).இதர வைப்புத்தொகை:**

தூத்துக்குடி மாநகராட்சி இதர வைப்புத்தொகை கணக்கில் இதர வைப்புத்தொகை கணக்கில் ரூ.**13,18,16,054/–**இருப்பு உள்ளது.

5). <u>தேர்தல் வைப்புத்தொகை:</u>

தூத்துக்குடி மாநகராட்சி தேர்தல் வைப்புத்தொகை கணக்கில் இதர வைப்புத்தொகை கணக்கில் ரூ. 3,19,340/–இருப்பு உள்ளது.

<u>தூத்துக்குடி மாநகராட்சி முன்பணம் விபரம் 2025–2026</u>

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு,மேற்கு, வடக்கு, மற்றும் தெற்கு மண்டல சுகாதார அலுவலர்களுக்கு பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக சில்லறை செலவினங்கள் மேற்கொள்ள சுகாதார அலுவலர்களுக்கு முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது, குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு காப்பீட்டு திட்டத்திற்காகன முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது.மேலும் பணியாளர்களுக்கு அரசு ஆணைப்படி பண்டிகைக்கான முன்பணம் வழங்கப்பட்டு வருகிறது.மேற்படி ஆண்டுதோறும் சுமார் ரூ.40 இலட்சம் வரை முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் அந்த அந்த நிதியாண்டிலே ஈடு செய்யப்பட்டு வருகிறது.

<u>தணிக்கை</u>

2025–26ம் ஆண்டின் ஆரம்பத்தில் 2091 தணிக்கைதடை பத்திகள்நிலுவையில் இருந்தன. 2024–2025 நிதியாண்டிற்கு 329 தணிக்கைதடை பத்திகள் நிவர்த்தி எழுப்பப்பட்டுள்ளது. தற்போது 2420 தணிக்கைதடைபத்திகள்நிலுவையில்உள்ளது.

13. <u>தூத்துக்குடி மாநகராட்சியின் சேமநலநிதி விவரம் 2025 – 2026</u>

இம்மாநகராட்சியில் பொதுப்பிரிவு, கணினி பிரிவு, வருவாய்ப்பிரிவு, மருத்துவப்பிரிவு மற்றும் குடிநீர் வழங்கல் பிரிவுகளில் தற்போது 78 அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் சேமநலநிதி திட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பணியாளர்களுக்கு சேமநலநிதியில் பணியாளர் எண் பெறப்பட்டு ஊதியத்தில் 12ரூ பிடித்தம் செய்யப்பட்டு, உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டு வருகிறது.

14. <u>பங்களிப்பு ஓய்வூதியத்திட்டம்</u>

இம்மாநகராட்சியில் பொதுப்பிரிவு, கணினி பிரிவு , வருவாய்ப்பிரிவு, மருத்துவப்பிரிவு மற்றும் குடிநீர் வழங்கல் பிரிவுகளில் தற்போது 190 அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியதிட்டத்தின் கீழ் பணிபுரிந்து வருகின்றனர்.

இப்பணியாளர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத்திட்டத்தில் கணினி வாயிலாக அரசு தகவல் தொகுப்பு மையத்திலிருந்து பணியாளர் குறியீட்டு எண் பெறப்பட்டு ஊதியத்தில் 10ரூ பிடித்தம் செய்யப்பட்ட தொகையும், அதற்கு ஈடான நிர்வாகப்பங்குத்தொகையும் உரிய கணக்குத்தலைப்பின் கீழ் செலுத்தப்பட்டு வருகிறது. பணியிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு முன்மொழிவிற்கான கருத்துரு தயார் செய்து கருவூல கணக்கு ஆணையர், அரசு தகவல் தொகுப்பு மையத்திற்கு அனுப்பப்பட்டு, ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு பெற்று மாவட்ட கருவூல அலுவலகத்தில் IFHRMS அமைப்பின் வாயிலாக ECS முறையில் தனியரின் வங்கிக்கணக்கில் வரவு செய்யப்படுகிறது.

## வருவாய்பிரிவு

**கேளிக்கை வரி.**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் இடம் பெற்றுள்ள திரையரங்குகள் விபரம் கீழ்க்கண்டவாறு.

1. கிளியோபட்ரா திரையரங்கம்
2. கே.எஸ்.பி.எஸ் திரையரங்கம்
3. சினிராஜ் திரையரங்கம்
4. மினிராஜ் திரையரங்கம்
5. தூத்துக்குடி சினிமா கம்பெனி (பி) லிமிடெட் திரையரங்கம்
6. பெரிசன் பிளாசா திரையரங்கம்

அறிக்கையாண்டில் (2025–26) வரப்பெற்ற மொத்த கேளிக்கை வரி ரூ.38,47,995/– ஆகும்.

**கேட்பு வசூல் நிலுவை.**

அறிக்கையாண்டின்படி (2025–26) சொத்துவரிக்குரிய (கட்டிடம்) மொத்த கேட்புத்தொகை ரூ.6821.87 இலட்சம், மொத்த வசூல் தொகை ரூ.5210.07 இலட்சம், மொத்த நிலுவை தொகை ரூ.1660.48 இலட்சம் ஆகும். காலிமனைவரியின் மொத்த கேட்புத்தொகை ரூ.1408.11 இலட்சம், மொத்த வசூல் தொகை ரூ.345.75 இலட்சம், மொத்த நிலுவை தொகை ரூ.1062.35 இலட்சம் ஆகும். தொழில் வரியின் மொத்த கேட்புத்தொகை ரூ.1293.90 இலட்சம், மொத்த வசூல் தொகை ரூ.480.79 இலட்சம், மொத்த நிலுவை தொகை ரூ.813.11 இலட்சம் ஆகும். குடிநீர் கட்டணத்தின் மொத்த கேட்புத்தொகை ரூ.3867.20 இலட்சம், மொத்த வசூல் தொகை ரூ.1974.09 இலட்சம், மொத்த நிலுவை தொகை ரூ.1893.11 இலட்சம் ஆகும். வரியில்லா இனத்தின் மொத்த கேட்புத்தொகை ரூ.740.42 இலட்சம், மொத்த வசூல் தொகை ரூ.448.33 இலட்சம், மொத்த நிலுவை தொகை ரூ.292.09 இலட்சம் ஆகும்.

| வரி விபரம் | கேட்பு(ரூபாய் இலட்சத்தில்) | வசூல்(ரூபாய் இலட்சத்தில்) | நிலுவை(ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| சொத்துவரி | 6821.87 | 5210.07 | 1660.48 |
| காலிமனைவரி | 1408.11 | 345.75 | 1062.35 |
| தொழில்வரி | 1293.90 | 480.79 | 813.11 |
| குடிநீர் | 3867.20 | 1974.09 | 1893.11 |

| | | | |
|---|---|---|---|
| கட்டணம் | | | |
| வரியில்லா இனம் | 740.42 | 448.33 | 292.09 |

**அம்மா உணவகம்**

தூத்துக்குடி மாநகராட்சியில் 02.06.2013 முதல் அம்மா உணவகங்கள் புதிதாக திறக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு 8 அம்மா உணவகங்கள் செயல்பட்டு வருகின்றன.

1 ராஜாஜி பார்க் அம்மா உணவகம்பாளை ரோடு (ராஜாஜி சிக்கன நாணய சங்கம்)

2 விவிடி வாட்டர் டேங்க் (தாமரை மாநகராட்சி மகளிர் சுய உதவிக் குழு)

3 புதிய பேருந்து நிலையம் அம்மா மாநகராட்சி மகளிர் சுய உதவிக் குழு)

4 சத்திரம்(சக்தி மாநகராட்சி மகளிர் சுய உதவிக்குழு)

5 குரூஸ்புரம் (மரிக்கொழுந்து மாநகராட்சி மகளிர் குழு)

6 ஜார்ஜ் ரோடு(மகிழ்ச்சி மாநகராட்சி மகளிர் சுய உதவிக் குழு)

7 சவேரியார்புரம்(செம்பருத்தி மாநகராட்சி மகளிர் குழு)

8 ஸ்டேட் பாங்க் காலனி(இந்திராமாநகராட்சி மகளிர் சுயஉதவிக் குழு)

மேற்கண்ட உணவகங்களில் காலை உணவு இட்லி மற்றும் சாம்பார், மதிய உணவு சாம்பார் சாதம், தயிர் சாதம் போன்ற உணவு பொருள் தயார் செய்ய பெண்களை சமையலராக தேர்வு செய்து உணவுகள் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி அம்மா உணவகங்களில் ஒரு அம்மா உணவகத்தில் சுமார் 8 முதல் 12 பெண்கள் சுழற்சி முறையில் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களுக்கான ஊதியம் தினக்கூலி அடிப்படையில் மாதம் வாரியாக கணக்கிடப்பட்டு அவரவர் வங்கி கணக்கில் ஊதியம் மாநகராட்சியால் வரவு வைக்கப்படுகிறது.

மேற்கண்ட 8 அம்மா உணவகங்களில் உணவு பொருள் தயார் செய்ய 2025 –26 ஆண்டில் ஊதியம், மளிகை பொருட்கள், காய்கறிகள் மற்றும் அரிசி போன்றவற்றிற்கு ரூ.2,29,15,950/– செலவினம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. இட்லி மற்றும் சாம்பார், மதிய உணவு சாம்பார் சாதம், தயிர் சாதம் போன்ற உணவு பொருள் விற்பனை மூலம் 2025–26 நிதியாண்டில் ரூ.75,55,812/– வரவு வரப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் காலை உணவு திட்டம்**

அரசாணை நிலை எண் 43. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4 –1) துறை நாள்.27.07.2022–ன்படி, வகுப்பு 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 15.09.2022 மற்றும் 16.09.2022 முதலும் 26.08.2025 முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் மொத்தம் 73 பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டம் மாநகராட்சி பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி பள்ளிகளில் பயிலும் 7842 மாணவர்கள் இலவச காலை உணவு திட்டம் மூலம் பயன்பெற்று வருகின்றனர். 2025 – 2026 நிதியாண்டில் மேற்படி திட்டத்திற்காக ரூ.1,43,22,858/– செலவிடப்பட்டுள்ளது.

**வரியில்லா இனங்கள்:**

மோட்டார் வாகனத்துக்கான அனுமதிக்கட்டண இழப்பை ஈடு செய்யும்படி அரசிடமிருந்து அறிக்கையாண்டில் தொகை எதுவும் பெறப்படவில்லை. சந்தைகள், வாகனங்கள் நிறுத்துமிடங்கள், பேருந்து நிலையம் ஆடு, மாடு அடிக்கும் இடம் ஆகியவற்றில் இருந்து அறிக்கை ஆண்டில் கிடைத்த வருமானம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வருடம் | சந்தைகள் | பேருந்து நிலையம் நுழைவு, கட்டணம் | ஆடு மாடு அடிக்குமிடம் |
|---|---|---|---|
| 2025–2026 | 9,65,000/- | 33,72,876/- | 9,41,760/- |

இம்மாநகராட்சி எல்கையில் வார சந்தைகளோ அல்லது குறிப்பிட்ட காலத்தில் நடைபெறும் சந்தைகளோ நடத்தப்படவில்லை. மேலும் எஸ்.எஸ்.பிள்ளை தெருவில் ஒன்றும், கோபால்சாமி தெருவில் ஒன்றும் ஆக இரண்டு தினசரி சந்தைகள் பொது ஏலம் அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

**தனியார்சந்தை:**

பாளையங்கோட்டை ரோட்டில் தூத்துக்குடி காய்கனி மார்க்கெட்டின் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் தனியார் சந்தையும், துறைமுக நான்கு வழிச்சாலை மேம்பாலம் அருகில் முத்துநகர் பனனா மற்றும் வெஜிடபுள்ஸ் மார்க்கெட் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில் தனியார் சந்தையும் ஆக மொத்தம் இரண்டு தனியார் சந்தைகள் இம்மாநகரப்பகுதியில் செயல்பட்டு வருகின்றது. மேற்படி பாளையங்கோட்டை சாலையில் அமைந்துள்ள தூத்துக்குடி காய்கனி தனியார் சந்தை நிர்வாகம் தொடர்ந்து உரிமையாணை கட்டணம் செலுத்தப்பட்டு வந்த நிலையில் உரிமையாணை கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிப்பது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் WP(MD) சூடி.9258/2021ன்படி தடையாணை உத்திரவு பெறப்பட்டுள்ளது. இவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேலும் முத்துநகர் பணணா வெஜிடபுள் மார்க்கெட் கட்டப்பட்டு முழுமையாக செயல்படவிலலை. மார்க்கெட் செயல்பட 111 கடைகள் கட்டப்பட்டுள்ள நிலையில் 3 கடைகள் மட்டுமே காய்கறி விற்பனை பயன்பாட்டில் உள்ளது.

**பேருந்து நிலையம்:**

தூத்துக்குடி மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இரண்டு பேருந்து நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிய பேருந்து நிலைய வளாகத்தின் ஒரு பகுதியில் 06.05.2022 முதல் ஆம்னி பேருந்து நிறுத்தும் இடம் செயல்பட்டு வருகிறது. புதிய பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவு கட்டணமாக பேருந்து ஒன்றுக்கு ரூ.15/–ம், ஆம்னி பேருந்து நிலையத்தில் பேருந்து ஒன்றுக்கு ரூ.50/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது. பழைய பேருந்து நிலையம் (அண்ணா பேருந்து நிலையம்) ரூ.53.00/– கோடியில் சீர்மிகு நகரத்திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பழைய பேருந்து நிலையத்தில், பேருந்து நுழைவு கட்டணமாக பேருந்து ஒன்றுக்கு ரூ. 12/–ம், மினி பேருந்து ஒன்றுக்கு ரூ. 50/–ம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**ஆடு மாடு அடிக்கும் இடம்:**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் சுகாதாரப்பிரிவு பணியாளர்கள் மூலம் ஆடு ஒன்றுக்கு ரூ.20/–ம் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. நிதியாண்டில் ஆடு அறுக்கும் இடத்தில் ரூ.7,20,760/– கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்றாண்டு தொகுப்பில் முதல் ஆண்டிற்கு ரூ.2,21,000/– க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

## நகரமைப்பு பிரிவு

**1. உள்ளூர் திட்டக்குழுமம்**

1971 ம் வருடத்திய நகர் ஊரமைப்பு சட்டம் பிரிவு 10(1)ன் கீழ்அரசு தனது 17.10.15ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை ஆணை எண் 1928ல் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியை த்னித்த உள்ளூர் திட்டக்குழுமமாக பிரகடனம் செய்துள்ளது. மேலும் இந்த குழுமத்துடன் இதர 29 கிராமங்களையும் வீட்டு வசதி துறையின் 01.05.83ம் தேதிய ஆணை எண் 8533 ல் அரசு கூட்டு உள்ளூர் திட்டக்குழுமமாகப் பிரகடனம் செய்துள்ளது. அரசு தனது வீட்டு வசதி மற்றும் நகர்புற அபிவிருத்தி துறையின் 16.10.1986ம் தேதிய 1620ம் ஆணையில் தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமத்தைச் செயல்பட தீர்மானம் செய்து உத்திரவு பிறப்பித்துள்ளது.

மேலும் அரசு தனது வீட்டு வசதி மற்றும் நகர்புற அபிவிருத்தி துறை 02.09.93ம் தேதிய 759ம் எண் ஆணையில் தூத்துக்குடி உள்ளூர் திட்டக்குழுமத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்களை தலைவராகவும் மண்டல நகரமைப்பு உதவி இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் மறு தீர்மானம் (Re–Consitution) செய்து உத்திரவு பிறப்பித்த அதன் பேரில் உள்ளூர் திட்டக்குழுமத்திற்கென தனி அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு உள்ளூர் திட்டக்குழுமம் செயல்பட்டு வருகிறது.

**2. முழுமைத்திட்டம் (90,666 சதுர கிலோமீட்டர்)**

தூத்துக்குடி மாநகராட்சிக்குரிய புதிய முழுமைத்திட்டம் (GIS Based Master Plan) நகரமைப்பு இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 17398/2015/MP/TCP–3‹ படி அம்ருத் (AMRUT Scheme inPhase II ) திட்டத்தின் கீழ் தயார் செய்து நகரமைப்பு துறையின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3. விரிவு அபிவிருத்தி திட்டம்**

1. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எ பாகம் 1
2. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் டி
3. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் இ
4. அங்கிகரிக்கப்பட்ட கிருஷ்ணராஜபுரம் விரிவு அபிவிருத்தி திட்டம்
5. அங்கிகரிக்கப்பட்ட பி பாகம் விரிவு அபிவிருத்தி திட்டம்
6. இணக்கம் பெறப்பட்ட சி பாகம் 1 விரிவு அபிவிருத்தி திட்டம்
7. அங்கிகரிக்கப்பட்ட எப் விரிவு அபிவிருத்தி திட்டம்
8. வரைவு நிலை எச் விரிவு அபிவிருத்தி திட்டம்
9. அங்கிகரிக்கப்பட்ட ஜி விரிவு அபிவிருத்தி திட்டம்
10. அங்கிகரிக்கப்பட்ட 3வது மைல் புதுக்குடி விரிவு அபிவிருத்தி திட்டம்
11. அங்கிகரிக்கப்பட்ட புதிய மேலூர் இரயில்வே நிலையம் விரிவு அபிவிருத்தி திட்டம்
12. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எ பாகம் 2
13. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் ஜிவா 1
14. பிரசுரம் செய்யப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் சி பாகம் 2
15. அண்ணா விரிவு அபிவிருத்தி திட்டம் அங்கிகரிக்கப்பட்டது
16. அங்கிகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் ஜிவா 2

மேற்கண்ட 16 நகரமைப்பு அபிவிருத்தி திட்டம் பற்றிய விளக்கமாக முந்ததைய ஆண்டுகளில் நிர்வாக அறிக்கையில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. **ஆக்கிரமிப்பு மீது நடவடிக்கை**

நடப்பாண்டில் ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகள் மீது நடவடிக்கை தொடரபட்டு மாநகராட்சி ரோடுகள் தெருக்களில் வைத்துள்ள ஆக்கிரமிப்புகள் அவ்வப்போது வருவாய்துறை, நெடுஞ்சாலைதுறை மற்றும் காவல்துறை உதவியுடன் அகற்றப்படுகிறது.

5. **கட்டிட விண்ணப்பங்கள்**

வரப்பெற்றுள்ள அனுமதிக்கட்டணம் 2025–2026 ஆம் ஆண்டில் ரூ.16,79,72,836/– ஆகும், கட்டிட அனுமதி கட்டணம் 27.02.2025ம் தேதிய 595ஆம் எண் தீர்மானத்தின்படி உயர்த்தப்பட்டுள்ளது.

6. **அனுமதியில்லா மனைப்பிரிவு மனைகள்**

அனுமதியில்லா மனைப்பிரிவு மனைகள் வரன்முறைப்படுத்துதல் அரசாணை எண் 78 வீடு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் அனுமதியில்லா மனைகள் வரன்முறைப்படுத்தும் கட்டணம் ரூ.56,07,124/– வளர்ச்சிக்கட்டணம் ரூ.1,50,41,950 வசூல் செய்யப்பட்டுள்ளது.

7. **மனை ஒப்புதல் விபரங்கள்:**

வரப்பெற்றுள்ள மனை பிரிவு கட்டணம் 2025–2026 ஆம் ஆண்டில் ரூ.86,59,800/– ஆகும்.

8. **மாநகராட்சி சொத்துக்கள் ஆவணப்படுத்துதல்**

மாநகராட்சி சொத்துக்கள் 526 எண்ணிக்கையிலான சொத்துக்களை இணையதளத்தில் ( TnurbanE–Seva.tn.gov.in ) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வாயிலாக அனைத்து சொத்துக்களையும் நகரளவை ஆவணங்களில் ஆணையாளர் பெயரில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

9. **பூங்கா பராமரிப்பு**

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் – 177 பூங்கா திறவிடங்கள் அமைந்துள்ள நிலையில் தற்போது 47 பூங்காக்கள், நடைபாதை, புல்வெளி, திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்கள், விளையாட்டு தலங்கள் அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

## பொது சுகாதாரம்

### மருத்துவ வசதி

தூத்துக்குடி மாநகராட்சியில் ஒரு அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை, 7– மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள், 14–நகர்ப்புற நல வாழ்வு மையங்கள், 1 – நகர்ப்புற பொது சுகாதார ஆய்வகம் மற்றும் 17–தனியார் மருத்துவமனைகள் இம்மாநகராட்சியில் செயல்பட்டு வருகிறது.

### பொதுசுகாதார அமைப்புமுறை

மாநகராட்சி பகுதியானது 60 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இவ்வார்டுகள் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என நான்கு மண்டலங்களாக ஒவ்வொரு மண்டலத்திலும் 15 வார்டுகள் கொண்டதாக உள்ளது. மேலும், திடக்கழிவுமேலாண்மை பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 3 வார்டுகளுக்கு 1 பொது சுகாதாரபிரிவு என 20 பொது சுகாதாரபிரிவுகளாக பிரிக்கப்பட்டு மாநகராட்சி துப்புரவுபணியாளர்கள் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் கொண்டு வீடுவீடாக சென்று குப்பைகள் சேகரம் செய்து

துப்புரவுபணிகள் நடைபெற்றுவருகிறது. இதன் மூலம் தினந்தோறும் சுமார் 180 டன் குப்பைகள் சேகரம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் சுமார் 97 டன் வரையிலான 21 நுண்ணுரசெயலாக்கமையங்கள் மற்றும் விவசாயநிலங்கள் போன்றவற்றில் சேர்க்கப்பட்டு உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதர மறுசுழற்சிகழிவுகள் தூய்மைபணியாளர்களின் மூலம் அங்கிகரீக்கப்பட்ட மறுசுழற்சி நிறுவனங்கள் மூலம் சுற்றுச் சூழலுக்கு உகந்தமுறையில் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

**திடக்கழிவு மேலாண்மை திட்டம்**

தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 60 வார்டுகளில் அமைந்துள்ள 152066 வீடுகள், 22698 எண்ணிக்கையிலான வணிக நிறுவனங்களில் தினசரி குப்பைகள் அகற்றப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண் 35883/2022/ EA1-SWM -7 நாள் 17.02.2023ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் M/s.Our land Engineering Works Pvt.Ltd என்ற தனியார் ஒப்பந்த நிறுவனம் மூலம் குப்பைகளை பிரித்து அகற்றப்பட்டு சுற்று சூழல் சுகாதார முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

மேற்படி பணிக்காக 178 இலகுரக (LCV) வாகனங்கள் மற்றும் 29 உயர்ரக (HCV)வாகனங்கள் (ம) மேற்படி பணிக்கு பணியாளர்கள் 702க்கு குறையாமல் நியமிக்கப்பட்டு பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன்21 17 யூனிட் நுண்ணுர செயலாக்க மையம் (MCC) மூலம் உரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு இலவசமாக கொடுக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள மறு சுழற்சிக்கு பயன்படும் குப்பைகள் கணேஷ் நகர், கதிர்வேல் நகர் மற்றும் ஜோதி நகர் வள மீட்பு மையத்தில் (RRC) பிரிக்கப்பட்டு மறு சுழற்சிக்கு கொடுக்கப்படுகிறது.

மேலும் தற்போது குப்பைகளை உற்பத்தியாகும் இடத்திலேயே 100 சதவீதம் பிரித்து வாங்கும் திட்டம் மாநகராட்சியில் ஈக 60 வார்டுகளிலும் நடைபெற்று வருகிறது. அதன் மூலமாக தற்போது 80 விழுக்காடு குப்பைகள் மேற்படி வார்டுகளில் பொது மக்களாகவே பிரித்து வழங்குகிறார்கள்.

இதுபோக மாநகராட்சி பகுதியில் உள்ள முக்கிய ரோடுகளில் உள்ள மண்களை மண் அள்ளும் வாகனம் மூலம் உறிஞ்சப்பட்டு வருகிறது. மேலும் சுற்று சூழலை பாதுகாக்கும் விதமாக மரக்கன்றுகளும் நடப்பட்டு வருகிறது.

**பொதுசுகாதாரப்பிரிவு பணியாளர்கள் பணியமைப்பு**

அரசாணை எண் 152 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்20.10.2022 ன்படி அனுமதிக்கப்பட்ட பொது சுகாதாரப்பிரிவு அலுவலர்களின் எண்ணிக்கை பின்வருமாறு

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை | காலியாகவுள்ள பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மாநகர நல அலுவலர் | 1 | 1 | 0 |
| 2 | சுகாதார அலுவலர் | 4 | 19+1(அயற்பணி) | 0 |
| 3 | துப்புரவு ஆய்வாளர் | 20 | 1 | 0 |

| 4 | பூச்சியியல் நிபுணர் | 1 | 1 (அயற்பணி) | 0 |
|---|---|---|---|---|

பின்வரும் பட்டியலில் கண்டுள்ள பணியிடங்கள் அரசாணை எண்.152 , நாள் 20.10.2022 க்கு முன் ஏற்கெனவே தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் ஆகும். கீழ்கண்ட பணியிடங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களும் ஓய்வுபெறும் காலம் வரை மாநகராட்சி நிதியிலிருந்து ஊதியம் வழங்கிடவும், ஓய்விற்குப்பிறகு தூய்மை பணியாளர், துப்புரவு மேற்பார்வையாளர், ஓட்டுநர் போன்ற பணியிடங்களை வெளிமுகமை மூலம் நிரப்ப ஆணையிட்டுள்ளது.

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | நகர சுகாதார செவிலியர் | 7 |
| 2 | பகுதி சுகாதார செவிலியர் | 2 |
| 3 | தூய்மை பணியாளர் | 110 |
| 4 | செவிலியர் | 1 |
| 5 | பெண் உதவியாளர் | 1 |
| 6 | துலக்குநர் | 4 |
| 7 | மலேரியா தலைமை பணியாளர் | 1 |
| 8 | மலேரியா பணியாளர் | 6 |
| 9 | ஓட்டுநர் | 11 |
| 10 | கன்சர்வன்சி இன்ஸ்பெக்டர் | 1 |

மாவட்ட பொது சுகாதார துறை அரசின் நேரடி நியமனம் வாயிலாக கீழ்க்கண்ட பணியாளர்கள் பொது சுகாதாரம் தொடர்பாக பணிபுரிந்து வருகின்றனர். பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ.எண் | பணியிடத்தின் பெயர் | பணிபுரிந்து வரும் பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மாநகர் நல அலுவலர் | 1 |
| 2 | மருத்துவ அலுவலர் | 5 |
| 3 | செவிலியர் | 7 |
| 4 | புள்ளியியல் உதவியாளர் | 1 |

அனைத்தும் தேசிய நகர்ப்புற சுகாதார சங்க திட்டத்தின் மூலம் நடைபெற்று வருகிறது.

<u>நோயாளிகள்/ பயனாளிகள் விபரம்.</u>

ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2025–26ல் சிகிச்சைக்காக வந்த வெளிப்புற நோயாளிகளின் (Out Patient) எண்ணிக்கை 416177. உட்புற நோயாளிகளுக்கு (In Patient) சிகிச்சை அளிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 9558. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 108 கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிரசவம் (Delivery) நடைபெற்றுள்ளது.

15வது நிதிகுழுவின் மூலம் 14 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் காலை 8 மணி முதல் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை இயங்கிவருகிறது. இந்த நகர்ப்புற நல்வாழ்வு மையத்தின் மூலம் 2024–25ன்படி 623837 பொதுமக்கள் பயனடைந்து உள்ளனர் திரேஷ்புரம் மற்றும் முள்ளக்காடு சுகாதார நிலையங்களில் தினமும் மாலை 4.30 முதல் 8.30 வரை பல்துறை மருத்துவர்கள் பங்குபெறும் பல்நோக்கு சிறப்பு மருத்துவம் (Poly Clinic) மூலம் 5754 பேர் பயடைந்துள்ளனர். மேற்படி பணிகள் அனைத்தும் தேசிய நகர்ப்புற சுகாதார சங்க திட்டத்தின் மூலம் நடைபெற்று வருகிறது.

**ஆட்டு இறைச்சி கூடங்கள்**

இம்மாநகராட்சி பகுதியில் செயல்படும் ஆட்டு இறைச்சி கூடங்களுக்கு என கால்நடை அதிகாரி தனியாக இம்மன்றத்தால் நியமிக்கப்படவில்லை. 2024–25ம் ஆண்டில் 28875ஆடுகள் அடிக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு**

பொதுமக்களிடம் திடக்கழிவுமேலாண்மைபணிகள் குறித்தும் தொற்றுநோய்களான டெங்கு, காலரா, மலேரியா, கொரோனா, விசர்நோய் (ரேபிஸ்) குறித்தும் அரசின் நலத்திடங்கள் குறித்தும், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு பயன்படுத்தும் இலகுரக வாகனம் மூலம் அன்றாடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்து அவ்வப்போது விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது

**பள்ளி மருத்துவ ஆய்வுத் திட்டம் (RBSK).**

தூத்துக்குடி மாநகராட்சியில் இரண்டு மருத்துவ குழுக்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் அங்கன் வாடி மையங்களுக்கு சென்று குழந்தைகளின் உடல்நலத்தினை ஆய்வு செய்து நோய்களை கண்டறிதல், பிறவி குறைபாடு, வளர்ச்சி தாமதம் மற்றும் அன்ன பிளவு ஆகியவற்றை பரிசோதனை செய்து சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மேற்படி குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படின் இது குறித்த தொடர் மேல் சிகிச்சை எடுத்திட அரசு மருத்துவமனை மற்றும் கலைஞரின் காப்பீட்டு திட்டத்தின் கீழ் சூர்யா மருத்துவமனை, அப்பலோ மருத்துவமனை போன்ற மருத்துவமனைக்கு சிகிச்சை பெற மேற்படி குழந்தைகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர். மேற்படி திட்டத்தின் கீழ் 40000 குழந்தைகளுக்கு ஆய்வு செய்யப்பட்டதில் 40 குழந்தைகள் மேல் வைத்திய சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

**கொக்கிபுழு**

இம்மாநகராட்சியில் அரசின் மருத்துவமனையில் இந்நோயால் எவரும் அனுமதிக்கப்படவில்லை. கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு கழிப்பறை அமைக்க அறிவிப்பு அனுப்பப்பட்டு, கழிப்பறை இல்லாத வீடுகளே இல்லை என்ற நிலை எட்டப்பட்டுள்ளது. மேலும், மாநகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இலவசமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கழிவுநீர்**

மாநகராட்சி பகுதியில் பாதாளசாக்கடை மற்றும் வடிகால் வசதியில்லாத பகுதிகளில் அமைந்துள்ள சுமார் 11430 வீடுகளில் உள்ள கழிவுநீர் தொட்டிகள் மாநகராட்சி 8 எண்ணிக்கை கொண்ட கழிவுநீர் வாகனங்கள் கொண்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

மாநகர் சுத்திகரிப்பு தொழிலாளர்களின் நிலை போதிய அளவு திருப்திகரமாக உள்ளது என சொல்லலாம். அவர்கள் மாநகராட்சி குடியிருப்புகளிலும் மற்ற வீடுகளிலும் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் சுற்றுப்புற பகுதியை சுத்தமாக வைத்துள்ளனர்.

## தொழில் உரிமம்

வியாபாரங்களுக்கான அனுமதி கொடுப்பதில் அவைகள் உற்பத்தி செய்யும் இடங்கள் மாவுபதார்த்தங்கள் விற்பனை, பானங்கள் தயாரித்தல் போன்றவைகள் குறித்து மிகவும் கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அவைகள் சுத்தமான முறையில் சுகாதாரமாக நடத்ததப்படுகின்றனவா என்று கவனிக்கப்பட்டது. அறிக்கையாண்டில் 10170 கடைகள் மூலம் மாநகராட்சிக்கு ரூ.2.56 கோடி உரிமம் கட்டணமாக வரவு வரப்பெற்றது.

## பொதுசுகாதாரமும் பாதுகாப்பும்

இம்மாநகராட்சிப் பகுதியில் தீயணைக்கும் நிலையம் ஒன்று உள்ளது. இதில் ஒருஆம்புலன்ஸ் பிரிவும் உண்டு. இது மாநகராத்தில் ஏற்படும் தீவிபத்தைத் தடுக்கஉதவுகிறது.

## டெங்கு மலேரியா கொசு ஒழிப்பு பணிகள்

தூத்துக்குடி மாநகராட்சியில் முதிர் கொசுக்களை ஒழிக்க Pyrethrum மற்றும் Malathion என்கிற வேதி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனை டீசலுடன் சேர்த்து புகை மருந்தாக நான்கு VEHICLE MOUNTED FOGGING MACHINE மூலமாக சுழற்சி முறையில் தினசரி 4 வார்டுகளில் அடிக்கப்பட்டு வருகிறது. மேலும் 20 PULSE FOGGINGMACHINE மூலமாக வீடுகளில் INDOOR FOGGING அடிக்கப்படுகிறது. மற்றும் 20 HAND FOGGING MACHINEமூலம் காய்ச்சல் கண்ட வீடுகளில் INDOOR FOGGING அடிக்கப்படுகிறது. மேலும் கழிவுநீர் கால்வாய்களில் BT வேதி மருந்து இரண்டு LCV வாகனத்தில் வைத்து PEDAL SPRAYERமூலம் சுழற்சி முறையில் தினசரி இரண்டு வார்டுகளில் தெளிக்கப்பட்டு வருகிறது. மற்றும் மலேரியா பணியாளர்கள் MALE DBC பணியாளர்கள் மூலம் SPRAYER உதவியுடன் BT வேதி மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. மேலும் 166 DBC பணியாளர்கள் வீடுவீடாக கொசுப்புழு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். DBC பணியாளர்கள் மூலம் தினசரி ஆய்வு செய்யப்படும் வீடுகளில் கொசுப்புழுக்கள் இருந்தால் ABATE வேதி மருந்து தெளித்து அழிப்பதுடன் கொசு உற்பத்தி காரணிகள் கண்டறிந்து அழிக்கப்பட்டு வருகிறது. மேலும் துப்புரவு பணியாளர்கள் மூலம் கூட்டு துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு கொசு உற்பத்தி காரணிகள் அழிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

## தூய்மை பணியாளர்களுக்கான உணவு திட்டம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தூய்மை பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டம் 09.02.2026 அன்று துவங்கப்பட்ட நிலையில் நிரந்தர மற்றும் தனியார் வெளிகொணர்வு முகமை மூலம் மாநகராட்சியில் பணிபுரியக் கூடிய 1702 நபர்கள் இத்திட்டத்தின் வாயிலாக பயனடைந்து வருகின்றனர்.

## குப்பைகள் அகற்றுதல்

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பொது மக்கள் பயன்படுத்தும் பொது இடங்கள் மற்றும் பொழுது போக்கு இடங்களில் உள்ள குப்பைகளை 110 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் தனியார் வெளிக்கொணர்வு முகமை மூலம் 702 தூய்மை பணியாளர்களை கொண்டு குப்பைகள் அகற்றப்பட்டு தூத்துக்குடி மாநகரம் தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

## தூய்மை பாரத இயக்கம் 2.0

தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டம் 2025–2026ன் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட,பாலவிநாயகர் கோவில் தெரு, கருணாநிதி நகர், எம்.ஜி.ஆர் நகர், ராஜபாண்டி நகர், சத்யா நகர், லேபர் காலனி,இராஜாஜி பூங்கா, முத்துநகர் கடற்கரை, அறிஞர் அண்ணா பேருந்து நிலையம், ரோச் பூங்கா, அரசு மருத்துவ கல்லூரி வளாகம் அருகில் ஆகிய பகுதிகளில் ரூ.238.52 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம்,பொதுகழிப்பிடம் மற்றும் சிறுநீர் கழிப்பிடம் கட்டும் பணிகள் என அனைத்து பணிகளும் முடிவுற்றுள்ளது

மாநகராட்சிக்கு சொந்தமான கணேஷ்நகர், துரைக்கனி நகர், மேட்டுப்பட்டி, ஆகிய பகுதிகளில் MCC மற்றும் MRF கட்டப்பட்டு தேவையான இயந்திரங்கள் மற்றும் மேற்கூரைகள் அமைக்கும் பணிகள் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

## பிறப்பு / இறப்பு பதிவு செய்தல்

இம்மாநகராட்சி பகுதிக்குள் நடைபெறும் பிறப்பு / இறப்புகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள பொது சுகாதார பிரிவு அலுவலகங்களில் சுகாதார ஆய்வாளர்கள் மூலம் பதிவு செய்யப்பட்டு வருகிறது. நாளது தேதியிலான பதிவுகள் அனைத்தும் கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொதுமக்கள் தாங்களாகவே சான்றிதழ்களை பதிவிறக்கம் செய்துக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சியில் உள்ள நான்கு மண்டலங்களிலுள்ள பிறப்பு இறப்பு பதிவு மேற்கொள்ள 3வார்டுக்கு ஒரு பிரிவு என 20 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பிறப்பு இறப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2018 முதல் பிறப்பு இறப்பு www.crstn.orgஎன்ற இணையத்தில் சான்றிதழ் எடுத்துக் கொள்ளும் வசதி நடைமுறையில் இருந்து வருகிறது. மேலும் 2018க்கு முன்பு உள்ள பிறப்பு இறப்பு சான்றிதழ்களை www.tnurbanepay.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலமாகவும் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. அலுவலகத்தில் உள்ள பிறப்பு இறப்பு பதிவு அறையில் மாநகராட்சி கருவூலத்தில் உரிய கட்டணம் செலுத்திய பின்னர் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது.

**பிறப்பு விகிதம்**

2024–2025ம் ஆண்டில் இருந்து இறந்து பிறந்த குழந்தைகள் நீங்கலாக 4620 குழந்தை பிறப்புகள் பதிவு மற்றும் 2250 இறப்புகள் பதிவு செய்யப்பட்டன.

**டாக்டர் முத்து லெட்சுமி ரெட்டி அவர்கள் நிதி உதவி**

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம் இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை கர்ப்பிணி பெண்களுக்கு உடல்நலத்தினை மேம்படுத்த ரூ.18000/– நிதி உதவி வழங்கும் அரசு திட்டமாகும். பொது சுகாதார துறை திட்டமான இத்திட்டம் இம்மாநகராட்சி பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2024–25ம் நிதியாண்டில் இம்மாநகராட்சிக்கு ரூ.2,24,49,000/– நிதி ஒதுக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் 583 விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியுடைய 350 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**தெரு நாய் கருத்தடை**

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் 01.04.2025 முதல் 31.03.2026 வரை தெருக்களில் சுற்றி திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை செய்த நாய்களின் எண்ணிக்கை சுமார் 120. மேலும் சாலையில் சுற்றி திரியும் நாய்களை பொது மக்களின் புகாரின் அடிப்படையில் பிடிக்கப்படுகிறது.

**அசையும் சொத்துக்கள் ஆவணப்படுத்துதல்.**

பொது சுகாதார பிரிவு வாகனங்கள் மொத்தம் 172 எண்ணங்கள் உள்ளன .

## மின் ஆளுமை (E – Governance)

இம்மாநகராட்சியில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம், வரியில்லா இனங்கள், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்து சான்றிதழ் பெறுதல், கட்டிட அனுமதி, வர்த்தக உரிமம் ஆகிய சேவைகள், கோரிக்கைகள் ஆகிய இவை அனைத்தும் சார்ந்த செயல்பாடுகள் ஆன்லைனில் https://tnurbanepay.tn.gov.in என்ற இணையதள மூலமாக விண்ணப்பிக்க, செலுத்த ருசூஐளு மென்பொருளில் வசதிகள் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் இம் மென்பொருளில் மாநகராட்சி செயல்பாடுகள் அனைத்தும் 27 ஆடினரடந–களாக செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் எளிதான முறையில் வரிசெலுத்துவதற்கு மைய அலுவலகத்தில் இரண்டு கணினிவசூல்மையமும், நான்குமண்டலங்களிலும் தலா இரண்டுகணினிவசூல்மையமும், புதியபேருந்துநிலையம், போல்டன்புரம், சந்தைரோடு வார்டுஅலுவலகம், குரூஸ்புரம் ஆகிய இடங்களில் தலா ஒருகணினிவசூல்மையமும் செயல்பட்டுவருகிறது. இவ்வலுவலகத்திலுள்ள தகவல்களை பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்துகொள்வதற்கு www.thoothukudicorpoation.com இணையதளத்தில் பார்ப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

## பொது குறிப்பு

மாநகராட்சி நிதிநிலைமை பற்றாக்குறையில்லாமல் சரிநிலையில் உள்ளது. பொதுமக்களுக்கு தேவையான நடைமுறையிலுள்ளவசதிகளையும் சேவைகளையும் தொடர்ந்து தேவைக்கேற்ப தகுந்தாற்போல் மாமன்றம் பராமரித்து வருகிறது. சாலைவசதிகளை மேம்படுத்த நிதிவசதிபோதுமானதாக இல்லாததால் நகரின் மத்திய, மாநில அரசின் திட்டங்களின் வாயிலாக செயல்படுத்த பிரேரணைகள்சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நகரில்அமைக்கப்பட்டுள்ளதெரு மின் விளக்குகள் நன்கு பராமரிக்கப்பட்டு வரப்பெறுகிறது. தேவையான இடங்களில் குறிப்பாக மாநகராட்சிகளுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு புதிய மின் விளக்குகள், மின் கம்பங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாநகரில் தினசரி குடிநீர் விநியோகம் என்ற நோக்கத்தில் தனிகவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பொதுசுகாதாரம் நல்லமுறையில் பராமரித்துவர அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகிறது.

02.03.2022 முதல் புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளமேயர் மற்றும் உறுப்பினர்கள் பதவி ஏற்று செயல்பட்டு வருகின்றனர். அறிக்கை ஆண்டில் மேயர் மற்றும் ஆணையர் இடையே சுமுகமான நிலைமை நிலவிவருவதுடன் மேயர், துணைமேயர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் மாநகராட்சி நிர்வாகத்தில் ஆணையருடன் முழு ஒத்துழைப்பு தருகிறார்கள்.

மேலும், அறிக்கையாண்டில் 01.04.2025 முதல் 25.06.2025 வரை திரு. வி. மதுபாலன், இ.ஆ.ப, அவர்கள், 30.06.2025 முதல் 30.08.2025வரை திரு.பானோத் ம்ருகேந்தர் லால், இ.ஆ.ப அவர்கள் ~~மற்றும்~~ 01.09.2025 முதல் தற்போது வரை திருமதி.சி.ப்ரியங்கா, இ.ஆ.ப அவர்கள் ஆணையராக பணிபுரிந்து ~~வந்துள்ளார்கள்.~~

சி1/2851/2025

ஆணையர் — மேயர், மாமன்றம், தூத்துக்குடி

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.26.05.2026

மாமன்ற தீர்மான எண் 852 நாள் 27.5.26

(ஒ.ம்) பெ. ஜெகன்
மேயர்
தூத்துக்குடி மாநகராட்சி
/உண்மை நகல்/

ஆணையருக்காக 27/5/26
தூத்துக்குடி மாநகராட்சி